1993 ஏப்ரல் 6]

260—

நீலகிரி மாவட்டத்தில் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களில் சிறுதொழில் துவங்குதல்.

*10829—திரு. எச்.எம். ராஜு :
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சிறு தொழில் துவங்குவதற்கான கோரிக்கை மனுக்கள் அரசுக்கு வநதுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : ஊரகத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 209 நிறுவனங்களுக்கு நிரந்தர சிறுதொழில் சான்றிதழ் வழங்கி அவை சிறுதொழில் நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டப் பகுதிகளில் போதிய அளவுக்கு மூங்கில் கிடைப்பதனால் அந்த மூலப்பொருளை வைத்து வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகா மட்டும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதுபோன்ற கோரிக்கைகள் அரசுக்கு வருமேயானால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தொழில் துறையில் பொற்காலம் படைத்து வருகிற இந்தக் கால கட்டத்தில் இதுபற்றிய உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நீலகிரி மாவட்டத்தில் எல்லா வகை பழங்களும், தேனும் அதிக அளவில் கிடைப்பதனால் அங்கே ஒரு ஜாம் ஃபேக்டரி அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை அரசு அமைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறுதொழில் துவங்குவதற்கு கோரிக்கை மனுக்கள் அரசுக்கு வந்துள்ளனவா என்ற வினாவை எழுப்பியுள்ளார்கள். எனவே அதற்கு தற்போது என்னிடம் பதிலுரைகள் உள்ளன. மேற்கொண்டு கேட்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவைப் பொறுத்தவரையில், அங்கேயுள்ள மாவட்ட மக்களுக்கு தொழில், வேலைவாய்ப்பு ஆகியவற்றை அளிக்கக்கூடிய நோக்கத்தோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிறப்பான ஆட்சியில் கோரிக்கைகள், மனுக்கள் உரிய முறையில் வருமேயானால் அவை பற்றி அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.ஆர். ராஜு.

திரு. கே.ஆர். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பதிவு பெற்ற சிறு தொழில்கள் எத்தனை? அந்த சிறு தொழில்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு? வேலைவாய்ப்பு பெற்றோர் எவ்வளவு பேர்? இந்த விவரங்களைப் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு 28—2—1993 வரை சிறுதொழில் நிறுவனங்களாக நிரந்தர சான்றிதழ் பெற்றுள்ள நிறுவனங்கள் 209, இத்தொழில்களில் செலுத்தப்பட்ட முதலீடு 491.15 இலட்சங்கள், வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றோர் எண்ணிக்கை 1129.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]